www.padippakam.com

# விழாக் கோலம்



05.09.1999

படிப்பகம்

www.padippakam.com

எங்கள் பாட்டுக் கனகர் ஐயா
கந்தனை பாடுவார்.
முக்- கண்ணனை பாடுவார்
நந்தனை பாடுவார்.
இள- நங்கையரையும் பாடுவார்
சந்தணம் போல் இவர் புகழ்பரவ
வாழ்த்துவோம்....வாழ்த்துவோம்.....


பாரீஸ் லாசப்பலில்................

சுத்தமான, தரமான, இறைச்சி வகைகளுக்கு

**ஜவ்னா இறைச்சிக் கடை**

*JAFFNA BOUCHERIE*

**தினமும் பங்கு இறைச்சி மரை வத்தல் அத்துடன்**
**சிறந்த முறையில் தயாரிக்கப் பட்ட**
**மசாலாத்துாள், மிளகாய்த்துாள் போன்றவையும்**
**இங்கு உண்டு.**

**70, rue Louis Blanc**
**75010 Paris**
**Métro: La Chapelle**
**Tel.: 01 40 35 46 47**


படிப்பகம்

www.padippakam.com

# பாட்டுக் கனகருக்கு என் வாழ்த்து

*சி. காராளபிள்ளை*

கடந்த நாற்பது வருட காலமாக நானறிந்த பாட்டுக் கனகர். பவளவிழா காணும் இந்நாளில் எனது மனமுவர்ந்த வாழ்த்துக்கள்.

புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நான் ஆசிரியராக சேர்ந்த காலத்தில் ஒரு பிரபலமான பாடகராக விளங்கியவர் இந்த பாட்டுக்கார கனகரத்தினம்.

அவரின் பாடலின் மகிமைக்கு எவரும் அள்ளிக் கொடாத பட்டமாக பாட்டுக்கார கனகராக மாற்றியது.

நான் உடல் சோர்ந்திருந்த நேரங்களில் தனது பாட்டின் மூலம் உற்சாகமூட்டிய அந்த நாட்களை என்னால் மறக்கமுடியவில்லை

அந்தநாள் இளைஞர்கள் மத்தியில் தமிழ் உணர்வை ஊட்டும் வகையில் மேடைகளில் தனது வெண்கலக் குரலால் பாடி உணர்ச்சியூட்டியவர் இந்த பாட்டுக் கனகர்.

எனது நண்பர் கனகர் இன்னும் பல்லாண்டு காலம் ஆரோக்கியத்துடன் வாழ என் இதயத்தால் வாழ்த்துகின்றேன்

*அன்பன்*
*சி. காராளபிள்ளை*



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு இசைக்குயில் தனது

## பவளவிழாவில் பாடுகின்றது....

கலைஞர், எம். கனகரட்ணம் அவர்களின் வாழ்க்கை குறிப்புகள்

1925ம் ஆண்டு
புங்குடுதீவு 6ம் வட்டாரப்
மயில்வாகனம்- செல்லாச்சி தம்பதிகள் ஈழத் தமிழ் கலைக்கு தொண்டாற்ற ஒரு புத்திரனை தந்தார்கள். அவர்தான் கனகரட்ணம் இன்று விழா காணுப் நாயகன் பாட்டுக் கனகர்.படிப்பு ஐந்தாம் வகுப்பு ஆனால் நடிப்பு பட்டப் பெற்றது. இழமையில் சாவகச்சேரியில் மாமனாரின் கடையில்.......

பொது வாழ்வில் விருப்பு 115இளைஞர்கள் இணைப்பில் றோட்டு திருத்துதல் சிரமதானம் இன்னும் பல. நாடகங்கள், நடனப் பிற்பாட்டு, கண்ணன் கோஷ்டி பாடகர், தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாடகர், காசி ஆனந்தன், மங்கையற்கரசி அமிர்தலிங்கம், ஆகியோருடன் இணைந்து பாடியுள்ளார்.

வியாபாரம், கடை. பிருந்தாவனம் மனேஜர்,- யாழ்-V.S.S.K பங்காளி, சாவகச்சேரி எம். பி. யாக இருந்த திரு வி. என். நவரட்ணப் அவர்களுடன் இணைந்து நடித்தவர் . அவரை பிச்சைக்காரனாக நடிக்க வைத்தவர். வெண்சங்கு, திரைப்பட நடிகை ராஜாமணி அவர்களுடன்இணைந்து சாவகச்சேரி தியேட்டரில் பிணம் பேசுகிது நாடகத்தில் நடித்துள்ளார்.

6வருடங்கள் கிளிநொச்சி சர்வோதயத்தில் தொண்டு. பொறுப்பாளர்- சிம்மர்சன் மதிப்பு சிறுவர் பாடசாலை வண்ணை சரவண பவா நாடக மன்றத்தில், ஏன் சிரித்தாய்?, வாளப் பிறந்தவள், செம்மனச் செல்வி, தொடாதே, எனப் பல நாடகங்கள்.சக கலைஞர்கள்-நெறியாளர் மணி, வேல் ஆனந்தன், மகாதேவன், வண்ணை ஆனந்தன், மகாலஷ்மி,சோழனின் செல்வன், நாடகத்தில் பெரும் கலைஞன் C.T.செல்வராஜா, நடிக்க முடியாது போக அப் பாத்திரத்தில் நடித்து பாராட்டு பெற்றவர்.

படிப்பகம்

www.padippakam.com

புலம் பெயர்ந்தது 1990 தைப் பொங்கல் தினம். யேசுதாஸ், பாலசுப்பிரமணியம், ஆகியோருடன்பாடிய பெருமைக்குரியவர். தேவாரட் பாடல்கள், இரங்கல் பாடல்கள் பாடுவதில் புகழ் பெற்றவர். பெரிய குடும்பப் பிள்ளளைகள் தசம். கடைசி மகன் மதி அழகன்விழுது, களின் துள்ளாட்டச் கலைஞர். இளைஞர்களின் நாயகன். கடந்த கால கனவுகள்-

தான் பாடிய கலைக் குழுக்களை நினைவு கூருகின்றார் பபி, புத்தூர் மார்க்கண்டு, யுனியன் செல்லத்துரை, வண்ணார் பண்ணை ராமசாமி, வேணு, தந்தை செல்வாரிற்கு இறுதிமரியாதை பாவாக தமிழ் ஈழம், இலங்கை எங்கும் ஒலித்த குரல்! அது பாட்டுக் கனகரின் குரல். அந்த இசைக் குயில் தனது பவளவிழாவிலும் பாடுகின்றது.

# முகத்தாரின் வாழ்த்து

*பாட்டுக்கார கனகரே!*
*பவளவிழா நாயகனே!*
*வாழ்த்துகின்றேன் உம்மை!*

*கலை வாழ்க்கையிலே பொன் விழா காண்பது என்பது அசுர சோதனையே!*
*பாட்டுக்கு பதம் சொல்லித் தந்த பெருமகனே! நேரில் உமை வாழ்த்த முனைந்தேன் முடியவில்லை, வேதனையே.*
*உமது எழுது கோலை ஈரப்படுத்திக் கொள்ளுங்கள்.*
*உங்கள் ஆக்கங்கள், விடுதலை கீதங்கள் எல்லாம், உங்கள் குரலில், விடுதலை வேட்கையாய், உரத்து ஒலிக்கட்டும்.*

*என்றும் அன்புடனும் நட்புடனும்*
*முகத்தான் ஜேசு*

*அருமைத்தம்பி சத்தியா!*
*சத்தியமே ஜெயம்!*
*பாரீஸ் வந்தேன். வந்தபின் அறிந்தேன். நீர். தாகத்தில், வடித்த மனிதன் கவிதையை அடுத்த ஒலித்தட்டாக்கி விட்டால், மனிதப் எணர்ச்சி பெறும்.*

*அன்புடன் அண்ணன்*
*முகத்தான் ஜேசு*


படிப்பகம்

# காலங்களில் இவன் வசந்தம்...........
# கலைகளிலே இவன்...................

ஊரை நினைக்கின்றபோது.............
நான் பிறந்த ஊரை நினைக்கின்றபோது...........
அதிலும் ஒரு கால் நூற்றாண்டை பின்னோக்கி பார்த்து நான் பிறந்த ஊரை நினைக்கின்றபோது........
ஊரார் வீட்டு மாங்காயை துணிவோடு களவாகப் பறித்து மாங்காய்காறன் வீட்டு மதிலிலேயே சிதறக் குத்தி நண்பர்களுடன் சுவைத்துத்தின்ற அந்த நாட்களை நினைத்துப் பார்க்கின்றபோது...........
கறிவாங்க காசில்லாத நாட்களில் எங்கள் கல்லுக்காணிக்குள் நாங்கள் பயிரிடாமலேயே தானாக முளைத்த அந்த சுண்டங்காயையும் தூதுவளை இலையையும் பிடுங்கி நாவிற்கு ருசியாக அற்புதமான குழம்பும், அரைச்ச சம்பலும், செய்து வைக்கும் அம்மாவின் அற்புத சாதனையை நினைத்துப்பார்க்கின்றபோது........
திருவிழாக்காலங்களில் சிலிர்த்து நிற்கும் அந்த ஆலயங்களில்! சின்ன மேளங்களும், பெரிய மேளங்களும், இசைக்குழுக்களும், கானம் இசைக்க... பக்தியோடு வரும் பெரிசுகளும், பார்க்கவேண்டியவர்களை பார்ப்பதற்கென்றே வரும் இளசுகளும், அடடா எத்தனை ஜோடிகள் கண்களாலேயே பேசி பின் தம்பதிகளான வரலாறுகள்........
இப்படி எத்னை எத்தனையோ மனதிற்குள்ளேயே வரலாறுகளாய் பதிந்து கிடக்கும் அந்த நாட்களை நினைத்துப் பார்க்கின்றபோது.....
வெளிநாட்டில் நாம் வாழும் இயந்திர வாழ்க்கையில் இவைகளை எல்லாம் நினைத்துப் பார்க்க எமக்கு நேரம் கிடைப்பதில்லைத்தான்! இருந்தாலும் எழுபத்தைந்து வயதை தாண்டி இன்று எங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த வயதாகிப்போன இளைஞன்! எங்கள் பாட்டுக்காற கனகரை பார்க்கின்றபோது நான் முன்பு கூறிய பழைய நினைவுகள் எல்லாம் என்னை அறியாமலேயே எனது நினைவிற்கு வருகின்றது.
அது என்ன வயதாகிப்போன இளைஞன் என்று கேட்கின்றீர்களா?

www.padippakam.com

எழுபத்தைந்தை தாண்டிய பின்பும் கோபுரத்துக் கலசத்தில் இருந்து ஒலிக்கும் மணியோசையின் வெண்கலக் குரலோசைபோல இந்தக் கனகரின் குரலிலும எத்தனை இளமை?
இன்றைய இளசுகள் கூட சிரமப்பட்டு பாடவேண்டிய பாடல்களையெல்லாம் இவர் சர்வ சாதாரணமாக பாடிவிட்டு போகும் விந்தையை பார்க்கும் போது!
இந்த எழுப்தைந் வயது இளைஞன் உயரத்தில் குள்ளமாக இருந்தாலும் கழுத்து வலிக்க நிமிர்ந்து பார்க்க வைக்கின்றது இவரின் திறமைகள்....சாதனைகள்....
இன்றைய தலைமுறைகள் இவரை ஒரு சரித்திரமாகவே எடுத்துக்கொள்ளலாம்.
வெளிச்சத்தை புதைக்க முடியாது என்பதற்கு இந்த பவளவிழா' நல்ல சாட்சி.
இவர் தனது இளமைக்காலங்களின் கலை நினைவுகளை கதை கதையாக சொல்லக்கேட்டு வியந்துபோனேன்! ஆனால் இன்றும் இவர் குரலில் இருக்கும் இளமை....அந்தக் குரலில் வரும் போதை கேட்பவர்களின் இதயஙங்களை கூட தள்ளாட வைத்து விடுகின்றது.
நடிகனாக இருந்த காலங்கிலும் சரி பாடகனாக இருக்கின்ற காலங்களிலும் சரி இவர் புகழ் பெற்றவர்களுடன் எல்லாப் இணைந்து சரசமாடியிருக்கின்றார்.
இலங்கையில் புகழ் பெற்ற அரசியல் வாதியான சாவகச்சேரி பாராளமன்ற உறுப்பினராக இருந்த வி. என். நவரத்தினம் அவர்களுடன் இணைந்து நாடகம் நடித்திருக்கின்றாராம்!?
இலங்கையில் மேடை, சினிமா, என்று கொடிகட்டி பறந்த புகழ் பெற்ற நடிகை சந்திரகலாவுடன் இணைந்து நடித்துள்ளாராம்!?
இந்த எழுபத்தைந்திலும் கே. ஜே. ஜேசுதாஸ், எஸ். பி. பாலசுப்பிரமணியம், போன்ற புகழ் பெற்ற பாடகர்களுடன் ஒரே மேடையில் தோன்றி பாடியிருக்கின்றார்.
இவைகள் எல்லாம் எங்கள் கனகரின் கலை வாழ்வின் வரலாற்று பதிவுகளில் ஒரு சில குறிப்புகள் மட்டுமே.
கலை வாழ்வு என்பது வாணவேடிக்கை போன்று ஜொலித்து மறைந்து போகும் ஒன்று! ஆனால் இன்று வரைக்கும் இவரால் தொடர்ந்து ஜொலித்துக்கொண்டு இருக்க முடிகின்றது என்றால்!? இப்படி எத்தனை பேரால் எழுபத்தைந்திற்கும் மேலாக ஜொலித்துக்கொள்ள முடியப்போகின்றது?


படிப்பகம்

www.padippakam.com


வானவில் ஜாலம் போல வாழ்ந்து வரும் இந்த கலைஞனுக்கு கிடைக்கும் மரியாதைதான் இந்த பவளவிழா.வானத்தையே நம்பி வாழ்ந்த கிராமத்தில் பிறந்து வானமே வியந்து கேட்கும் இனிய கானத்தையெல்லாம் வாரி வழங்கி வரும் இந்த கனகரை பாராட்டி விழா எடுப்பவர்கள் எல்லோரும் பாராட்டிற்குரியவர்களே.
பாட்டிற்கு தொண்டு செய்யும் ரத்தினம் அவர்களை பாராட்டி வைப்பவர்களோடு நானும் இணைந்துகொள்கின்றேன்.
எங்கள் பாட்டுக் கனகர் இன்னும் பல்லாண்டு காலப்
வாழ்க..வாழ்கவென வாழ்த்துவோம்.

அன்புடன்

## வண்ணை தெய்வம்

---

**வாழ்க்கைப்பாதையில்........**




படிப்பகம்

www.padippakam.com

# முத்திரை பதித்த ரத்தினத்தை வாழ்த்துவோம்.

மணியோசை மழையோசை செவியினிற் பாயும்
மங்கையர்கள் வளையோசை அதையினைப்போல்
கனிவான தமிழோசை கேட்போமென்றால்
பணிவோடு சொல்வேன் கனகர் பாடல் தந்தால்
குழலோசை ஒலிப்பதுபோல் அவர் குரலொலிக்கும்

கார்க்காலம் வந்துவிட்டால் காடுகளும் இளமை கொள்ளும்
யார் சொன்னார் கலைஞனுக்கு வயது தடையென்று
சீராளன் ரத்தினத்தின் குரலிற்கு வயதென்ன?
வாராத ராகமெலல்லாம் இசைத்து வரும் கனகரை
வாயார வாழ்த்துவோம் பல்லாண்டு வாழ்கவென்று.

பாவலர்கள் பாடிவைத்த பைந்தமிழ் பாட்டை மீண்டும்
பாட ஒரு பாடகன் வேண்டுமென்று தேடினால்
பாட்டுகக்காற கனகர்தான் ஓடிவந்து முன்னிற்பார்
கேட்டுப்பாரும் இவர் பாட்டைதோற்றுப்போவார்-நேற்று
பாடிவிட்டு போன அந்த உண்மை கலைஞரெல்லாம்

டி,ஆர்,மகாலிங்கமும், தியாகராஜ பாகதவரும்
நம்மிடையே இல்லையென்ற கவலையை தீர்ப்பதற்கு
ரத்தினத்தார் பிறந்து வந்தார் அக்குறையை தீர்த்துவைத்தார்
ரத்தினம்போல் பாட்டெழுதி தானே இசையமைத்து
முத்திரை பதித்த பாடலெல்லாம் பாடியுள்ளார்

பண்ணது மயல் விளைக்கும் பாகது சுவையளிக்கும்
மண்ணது விளை பொருள் கொடுக்கும்
மணமதுவோ நல் சுகம் பயக்கும் -இன்று
கண்ணது வலுவிளந்தும் தலையிலே நரை விழுந்தும்
இன்னமும் தன் குரலில் இளமையை கொண்டிருக்கும்
மன்னவன் ரத்தினம் பல்லாண்டு 'வாழ்கவென்று
மனதார வாழ்த்துவோம் மகிழ்வோடு வாழ்த்துவோம்.

நந்தினி



படிப்பகம்

www.padippakam.com

# 20ம் நூற்றாண்டில்

## ஈழத்தில் வளர்ந்த கலைகள்

*ஏ. ரகுநாதன்*

**மொழிக்கு முன் பிறந்தது கலை (அபிநயம்) என்பார் ஆன்றோர். அந்தக் கலைகளில் பல கிளைகள்.**

எந்தக் கலையும் மக்களை மகிழ்விப்பதே.
அதுதான் கலைகள் வாழ்வதன் அடிப்படை.
ஆராதிக்கப்படுவதின் சூத்திரம்.
நடனம், நாடகம், இசை, திரைப்படம், என அவை விரியும்.
இதில் தலையானது நாடகம் எனலாம். ஏனெனில் மற்றெல்லாக கலைகளையும் தன்னுள் அகம் கொண்டது நாடகக் கலை. அதன் விஞ்ஞான வடிவம் தான் திரைப்படக கலை.

அப்படிப்பட்ட நாடகக் கலையில் கூத்து, இசைநாடகம், வசன நாடகம் நவீன நாடகம் எனப் பல பெரும் பிரிவுகள் காலத்திற்கேற்ப பரிமாணங்களை எடுத்து வளர்ந்து வந்துள்ளது.

ஈழத்தில் 20ம் நூற்றாண்டின் மையப்பகுதியில் இக் கலைகள் மிகச் சிறப்பாக துளிர்த்து படர்ந்து இன்னும் ஒரு கால் நூற்றாண்டில் நாம் கலை வழியில் தனித்துவம் படைப்போம் என்று இறுமாந்திருந்தோம்! அதற்குச் சான்றாக இலக்கியத் துறையில் மிகச் சிறப்பான தனித்துவம் வாய்ந்த எழுத்தாளர்களும் விமர்சகர்களும் திகழ்ந்தார்கள்.

கலை வளர்ப்பதற்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட கலாநிதி வித்தியானந்தன் போன்றவர்களும் கலையில் புடம் போட்டார்கள்.
எந்த ஒரு நாட்டிலும் கலையும் இலக்கியமும் இணைந்து வாழ்ந்தால் தான் அவை சிறக்கும் இது சரித்திரம்.நல்ல கலைகளுக்கு மூலாதாரம் இலக்கியம் தான்.



படிப்பகம்

www.padippakam.com

அப்படி அக் காலகட்டத்தில் வளர்ந்து நிமிர்ந்த ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு முதுகெலும்பாய் முற்போக்கு எழுத்தாளர்கள் திகழ்ந்தார்கள்.

டானியல், கணேசலிங்கம், எஸ். பொ, கைலாசபதி, டொமினச் ஜீவா, செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், அகஸ்த்தியர், கனக செந்திநாதன், மு. கனகராஜன், கவிஞர் கந்தவனம், சாந்தன், நீர்வை பொன்னையன், கமால்தீன், என இது பெரு வரிசைப் படும்.

அதேபோல நாடகக் கலையின் மூத்த பிரிவான நாட்டுக்கூத்தில் பூந்தான் ஜோசப், மௌனகுரு, சிலுவைராசா, என ஒரு வரிசையும். இசை நாடகத்தில் சி. ரி. செல்வராசா, நடிகமணி வி.வி. வைரமுத்து, மாசிலாமணி, சின்னையா தேசிகர், ஜெயராஜா, கன்னிகா பரமேஸ்வரி, ராஜலஷ்மி, சரவணமுத்து, பொன்னுச்சாமி, சோமு வடிவேலு, ரத்தினம், என ஒரு பெரு வரிசையும

வசன நாடக கலைகளில் கலையரசு சொர்ணலிங்கம், சரவணமுத்து, சானா, விதானை செல்வரட்ணம், எஸ். ரி. அரசு, லடீஸ் வீரமணி, ரொசாரியோ பீரிஸ், ஜனம் பிரான்சீஸ், கே. எஸ். பாலச்சந்திரன்., சிவா சிவபாலன், கண்டி விஸ்வநாதராஜா, சங்கானை ஜோகநாதன், ஜவா□ர், ரகுநாதன், சின்னமணி, பற்குணம், ராம்தாஸ், செல்வசேகரன், அப்புக்குட்டி ராஜகோபால், நாச்சிமார்கோவிலடி ராஜன், சுப்புலஷ்மிகாசிநாதன், ராஜேஸ்வரி, மணிமேகலை, விஜயஸ் பீற்றர், ஆனந்தராணி சண்முகம், செல்வி ஜெயந்தி, என ஒரு பெரு வரிசையும்.

நவீன நாடகத்தில் தாசீசியஸ், குழந்தை சண்முகலிங்கம், சுந்தரலிங்கம், சுகேர் கமீட், பாலேந்திரா, அருட் தந்தை சவுரிமுத்து, என ஒரு பெரு வரிசையும்.

திரைப்படத்துறையில் கிருஸ்ணகுமார், வேதநாயகம், சுண்டுக்குளி சோமசேகரன், ரகுநாதன், ஸ்ரீசங்கர், எனஒரு வரிசையும். இசைத்துறையில் சிறு நகரங்கள், கிராமங்கள் எல்லாம் இசை மழையாக, இசை விழாவாக, சண்முகரத்தினம், பரம் தில்லைராஜா, திலநாயகப் போல், குலசீலநாதன், கருணாகரன், பொன் சுந்தரலிங்கம், என ஒரு பெரு வரிசையும். நாட்டியத் துறையில் சுப்பையா மாஸ்றடர், திரிபுரசுந்தரி,



படிப்பகம்

www.padippakam.com

லீலா கந்தையா, கிருஷாந்தி சேனாதிராஜா, லீலா நாராயணன், என பெரு வரிசையும்.

அடடா! ஈழத்தமிழன் அன்றைய காலகட்டத்தில் கலைப் பூங்காவில் தான் வாழ்ந்தான். கலைதான் அவன் சுவாசம் என்றே கூறவேண்டும்.

எத்தனை கலைஞர்கள்! எத்தனை இசைஞர்கள்! கலை பயில எத்தனை பள்ளிக் கூடங்கள், எத்தனை நாடக மன்றங்கள், அன்று ஈழத் தமிழனின் இரவெல்லாம் இசையாக, நாடகமாக, நாட்டியமாக, விழாக்களாக, இவைக்கெல்லாம் வளர்ப்பிடமாக கோவில் உற்சவங்கள். அதில் சிற்ப சித்திர வேலைப்பாடுகளுடன் புனித கலைகள். அவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் ஈழத்தின் கர்நாடக சங்கீதத்தின் அடி நாதமாக நாதஸ்வரக் கச்சேரிகள், கம்பீரமான முருகையாவில் ஆரம்பித்து பத்மநாதன், பஞ்சாபிகேசன், பாலகிருஸ்ணன், ஆறுமுகம்பிள்ளை, கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி, சின்னராசா, கணேசன், பழனி, எனத் தவில் மேதைகளும் தமிழ் மண்ணின் இசையாய், சுவையாய், காற்றெல்லாம் சங்கீதமாய், திரும்பிய இடமெல்லாம் கலை மழையில் நனைந்து கிடந்தார்கள் ஈழத் தமிழர்கள்.

அப்படி தேனாகக் கலை பெருக்கெடுத்தோடிய நாட்களில் யாழ்ப்பாணத்தில நாடகக் கலை வளர்த்த மன்றங்களில் வண்ணை சரவணபவா நாடக மன்றமும் ஒன்று. அதில் ஒரு பிரதான அங்கம் தான் இன்று பவள விழாக் காணும் கனகர் எனச் செல்லமாக அழைக்கப்படும் எம். கனகரட்ணம் அவார்.

பாடி நடிக்கக்கூடிய மிகச் சில கலைஞர்களில் நம் கனகரும் ஒருவர். அப்படிப்பட்ட கலைஞர் கனகர், தனது பவளவிழாக் காலத்திலும் பாட்டெழுதி பண் அமைத்து மேடையில் துடிப்புடன் பாடி நமக்கெல்லாம் பாரீஸ் மண்ணில்பெருமை சேர்த்து வருகின்றார்.

அவரினன் கலைச்சேவையை அன்று நேரில் கண்டவர்களில் நானும் ஒருவன்.தமிழர் கூட்டணிப் பாடகராக, எழுச்சிப் பாடல்கள், மறைந்த தலைவர்களுக்கு இரங்கல் பாடல்கள், நடனத்திற்கு பிற்பாட்டுக் கலைஞராக, நடிப்பிசை கலைஞனாக, நீண்ட ஒரு கலை வாழ்க்கையை ஆற்றியவர் நம் கனகர். ஆகவே அவரை வாழ்த்த வாருங்கள்.

வாழ்த்துவதற்கு வயசு அவசியமில்லை. நல்ல மனசு தான் வேண்டும். அவர் நீடுழி வாழ்ந்து எம் சின்னத் திரைப் படத்திலும் நடிக்கவேண்டும் என இறைவனையும் இயற்கையையும் வேண்டிக்கொள்கின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com





# அன்றும் இன்றும்......





படிப்பகம்

www.padippakam.com



உலகின் மிகச் சிறந்த உதைபந்தாட்ட வீரர்களில் ஒருவரான *Zinedine Zidane* அவர்களுடன் 'சத்தியா' கொலம்பியாவை சேர்ந்த புகழ் பெற்ற பிரான்ஸ் ஸ்பானியோல் பாடகர் *Bvenavent yra* அவர்களின் 'சத்தியா'வின் இசைத்தட்டை வாங்குகின்றார்.

# செய்திகள்

## ஆசிரியர் ரிரிபாலயம் துரைஸ்

'பாரீஸ் வந்தோம்'
'கீதவேள்வி'... 'தெய்வ
தரிசனம்'... இனி... 'ராகரசம்'

## சாதனை படைத்து வரும் 'சத்தியா'

'மல்லிகைப் பூவின் வாசனையை சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை அது போல..... 'சத்தியா' அவர்கள் மூன்று இசைத் தட்டுக்களை வெளியிட்டிருக்கின்றார். நான் காவது இசைத்தட்டை வெளி யிடும் முயற்சியில் மும்மரமாக ஈடு பட்டுக்கொண்டிருக்கின்றார் இருந்தாலும் வெறும் 'சத்தியா' என்று குறிப்பிட்டால் யாரும் இவரை உடனடியாக புரிந்து கொள்ள மாட்டார்கள். 'பாரீஸ் வந்தோம்' 'சத்தியா' என்றால் சின்னக் குழந்தை கூட உடனேயே இவர் பக்கம் ஆட்காட்டி விரலை நீட்டிவிடும். மழைக்கு முன்னம் மணக்கும் மண்ணை போல 'பாரீஸ் வந்தோம்' பாடல் இவரை இனம் காட்டி வைத்த பாடல். அந்த பாடலில் என்ன இருக்கிறது? என்று கேட்பதை விடுத்து என்ன இல்லை என்று தேடிப்பார்க்க வேண்டும்.

ஆடலுக்கேற்ற பாடலாக அமைந் தாலும் பாடலின் ஒவ்வொரு வரி களும் மனதுக்குள் ஒரு நெருடலை ஏற்படுத்துகின்றது. 'சத்தியா'வின் அசுர உழைப்பு 1996ல் 'பாரீஸ்



படிப்பகம்

www.padippakam.com

வந்தோம்' 1997ல் 'கீத வேள்வி' 1998ல் தெய்வ தரிசனம்' இம் மூன்று இசைத் தட்டுக்களிலும் நாற்பதிற்கும் மேற்பட்ட பாடல்கள் இருக்கின்றன. இவைகளில் பல பாடல்களின் கருத்தாளம்... அலைகள் இல்லாத பசுமிக் சமுத்திரத்தை போல... ஆழமாக அமைதியாக அடக்கமாக அமைந்திருக்கின்றது. 'சத்தியா' வை போல... 'ராகரசம்' இவரது நாலாவது இசைத் தட்டின் பெயர். இன்னும் எத்தனை இசைத்தட்டுக்களை இவர் வெளியிட்டாலும் மக்கள் மத்தியில் 'பாரீஸ் வந்தோம்' சத்தியா தான்.



கொலம்பியாவை சேர்ந்த புகழ்பெற்ற பிராஃஸ் ஸ்பானியோல் பாடகர் *Vri Bvenavent yr* அவர்கள் 'சத்தியா'வின் இசைத்தட்டை வாங்குகிறார்.



மறைக்கு முன்னால்
மனைக்கும் மன்னைப்
போல 'பாரீஸ்
வந்தோம்'
பாடல் இவரை இனம்
காட்டி வைத்து பாடல்
அந்த பாடலில் என்ன
இருக்கின்றது என்று
கேட்பதை விடுத்து
என்ன இல்லை என்று
தேடிப் பார்க்க
வேண்டும்.

கலைஞர்களின் சிறப்புகளை வெளிக்கொணரும் முகமாக வெளிவந்த 'தாகம்' பத்திரிகையில் இருந்து......



படிப்பகம்

www.padippakam.com

# நன்றிகள்

இச் சிறுமலரை உருவாக்குவதில்ஆர்வமுடன் உழைத்த திரு வண்ணை தெய்வம்

ஆக்கங்கள் வாழ்த்துக்கள் தந்து மலரை சிறப்பித்த கலைஞர்கள்....

விளம்பரங்கள் தந்து உதவிய வர்த்தக ஸ்தாபனங்கள்....

விழாவினை கலகலப்பாக்கிய இளையநிலா இசைக் குழுவினர்....

வாகன சேவை புரிந்த பேபி வாகன சேவை

விழாவினை ஒருங்கிணைத்து கொடுத்த றோயல் உணவகம்

இவை எல்லாவற்றிற்கும் மேலாக விழா சிறுப்புற உடல்....

உழைப்பையும், நிதி உதவியும் கொடுத்த

நல்ல இதயங்களுக்கும்..........

நன்றிகள்... நன்றிகள்......நன்றிகள்...

## விழாக்குழுவினர்..........



படிப்பகம்

www.padippakam.com

# இரத்தினப்பாடகர் எம். கே. இரத்தினம்...

ஈழத்தின் புங்குடுதீவை பிறப்பிடமாக கொண்ட மயில்வாகனம் கனகரத்தினம் அவர்கள் இன்று எழுபத்தி ஐந்தை தாதள்ளாத வயதிலும் குரலுக்கும் வயதிற்கும் சம்பந்தமில்லாத— தனது கம்பீரக் குரலால் மேடைக்கு மேடை பாட்டிசைத்து பாரீஸ் மண்ணிலே பல ரசிகர்களின் பாராட்டை பெற்று வருகின்றார்.ஆரம்ப காலங்களில் தமிழரசுக் கட்சியின் மேடைகளில் பிரச்சாரப் பாடல்களை பாடியுள்ளார்....

அத்துடன் பல சமூக நாடகங்களிலும் நடித்துள்ளார். அவற்றுள் தொடாதே, பிணம் பேசுகிறது, ஏன் சிரித்தாய்?, சிதறிய வாழ்வு, தாய் கேட்டவரம், என்னும் நாடகங்கள் புங்குடு தீவிலும், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கொழும்பு,போன்றஇடங்களில் மேடையேற்றப்பட்டுரசிகர்களால்பாராட்டைபெற்றவை....

நாடகங்களில் பாட்டோடு நடிப்பது இவரது தனிச் சிறப்பு....

ஈழத்தில் வெளிவந்த வெண்சங்கு திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்த ராஜாமணியுடன் இணைந்து நடித்துள்ளார். சாவகச்சேரியின் முன்னாள் பாராள மன்ற உறுப்பினர் திருவாளர் வி. என். நவரத்தினம்.... அவர்களுடன் சேர்ந்து நடித்த பிணம் பேசுகின்றது நாடகத்தில்... அவருக்கு பின்னணி பாட்டுக்குரல் கொடுத்ததையும் பெருமையாக குறிப்பிடுகின்றார்.

பாரீஸில் நடைபெற்ற ஜேசுதாஸ்—பாலசுப்பிரமணியம் இணைந்து வழங்கிய கச்சேரியில் திரு எம். கே. ரத்தினம் ஐயா அவர்கள்... அந்த மேடையில் பாடிய அமுதத் தமிழர் நாட்டிலே.... என்ற பாடல் சபையில் உள்ள அத்தனை ரசிகர்களையும் கரகோசம் செய்ய வைத்தது மட்டுமல்லாது பலரும் பாராட்டி பொன்னாடைகளும் மாலையும் அணிவித்ததையும் பார்த்தோம்.

பிரான்ஸ் ஆர். ரீ. எம். பிரதர்ஸ் நடாத்திய இரண்டு பாட்டுத்திறன்போட்டிகளிலும் பங்கு பற்றி சிறப்புப் பரிசில்களை வென்றிருக்கின்றார். பாரிஸ் கலை ஒளி மன்றத்தின் 3வது இசை வெளியீடான தெய்வதரிசனம் பக்தி இசைத்தட்டிலும் முருகா என்ற பெயர் சொன்னாலே.... என்ற பாடலை ஜீவா, பாரதி, இவர்களுடன் சேர்ந்து பாடியுள்ளார்.ஈழமுரசின் இசைமுரசுப் போடடியில் பாராட்டைப்பெற்று சிறப்புப் பரிசை வென்றவர்...

இந்தப் புலம் பெயர் மண்ணிலே இந்த தள்ளாத வயதிலும் கலைமீது கொண்ட காதலால் தனது கம்பீரமான குரலால் மேடைகள் எல்லாம் எங்கள் இனப் பற்று கொண்ட பாடல்களை பாடி கலை வளர்க்கும் திரு. எம். கே. ரத்தினம் அவர்கள் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து கலைத்தொண்டாற்ற வேண்டும்.பவளவிழா கொண்டாடும் இவர் பொன் விழாவும் காணவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

*பாரீஸ் வந்தோம் சத்தியா.*


படிப்பகம்

www.padippakam.com

# கலை ஒளியின் இசைப்படையல்.......
## அன்பின் இசை
## உள்ளங்களுக்கு....

பாரீஸ் வந்தோம், கீத வேள்வி, தெய்வதரிசனம்.....
இசைத்தட்டுக்களை தொடர்ந்து .... குறிகிய கால இடை வெளியில்....
ராக ரசம் ...என்னும் இசைப்படையலை உங்களுடன் பகிர்ந்து
கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்..........

கால நேர காசு பண மற்றும் இன்னோரன்ன இடையுறுகளுக்கு
மத்தியிலும் ..அறுசுவை மிக்க அமிர்தமாய் படைக்க முடியாத
நிலையிலும்..ஒரு சத்துமிக்க படையலாய்..பாசமுடன்... ராக ரசத்தை
எங்கள் அன்பு இசை உள்ளங்களின்..இசைப் பந்திக்கு விடுவதில்.....
புரிப்படைகின்றோம்.......

பிரான்ஸ்,ஜேர்மன் முன்னணி இசையமைப்பாளர்களின் கூட்டு இசை
வேள்வியில்.....பாரதி,சில்பி,ஜெயந்தி,ஆரணி,சௌமி.....பெண் இசை
குயில்களின்... இனிய குரல்களின் இணைப்பில்........
தாய் அன்பு... தமிழ் அன்பு...புலம் பெயர் வாழ் நிலை.. காதல்.....
கலை கலாச்சார நிலை....பற்றிய கருத்துக்களின் தொகுப்பில்.....
இந்த இசை ரசத்தை படைத்ததில் பேருவகை கொள்கிறோம்.....

இந்த இசைத்தட்டில் ஒலிக்கும் பாடல்கள் எவரையும் தனிப்பட்ட
முறையில் ..புண்படுத்துமாறு அமைக்கப் படவில்லை என்பதையும்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்......

எமது இசை வேள்விக்கு ...உந்து சக்தியாக இருந்து....உறுதுணை
புரிந்து..உதவிகள் புரிந்து...உவகைகள் தந்திடும் அனைத்து இசை
உள்ளங்களுக்கும் ...உளப்புர்வமான நன்றிகள் உரித்தாகுக.......

அன்பு நிறை நன்றியுடன்......
கலை ஒளி மன்றம்...
E mail:KALAIOLI@wanadoo.fr.

படிப்பகம்

www.padippakam.com

# இசையால் வசமாகும் உள்ளங்களுக்கு

சுடரும் பாட்டுக் கனகரின்
படரும் பவளவிழாத் தமிழ் பதித்த
செஞ்சுடரும் சத்தியாவின் விழாவும்
இசையும் கவிப்பேரும் இனிக்கும்
தரமாம் கலைஞராளின் பெருவிழா
பின்னரும்அறிந்தேகும் நல்லவிழா
ஒரே மேடையில் இரு பெரும் விழா!

சத்தியாவின் நான்காவது தட்டாம்
இசைத்தட்டு இன்புறத் தரும் இனிதே
சிறக்கும் துறக்காநெஞ் நினைவாக
இணைந்த இவ்விரு உயர்
கலைஞர்களை
நினைக்கும் தகமைகள்
பெரிதெனவே
மதிக்கும் உயிர் கவிஞன்
வாழ்த்தென
துணையாம் கலையருளும் பேறென

தாய்த் தமிழ்ப்பாஸிசுர ஒழுங்கு
சந்தம் தாளம் உள்ள இசையும்
புரிவும் அறிந்தும் உணர்வெனவும்
மேலும்-திங்களும் பரிதியும் போல்
பல்லியம் ஆர்த்து எழவும்
வாழ்த்துகின்றேன்
காட்டில் விலங்கறியும்
கைக்குழந்தை தானறியும்
பாட்டின் சுவையதனைப் பாம்பறியும்

**வாழ்த்தும் கவிஞன்**
**மா. கி. கிறிஸ்ரியன்**

பவளவிழா காணும்
எங்கள்
கனகர் ஐயா அவர்கள்
பொன்விழாகாணவும் சத்தியாவின் ராக ரசம்

வெற்றியடையவும் வாழ்த்துகின்றோம்

**இளையநிலா**
**இசைக்குழுவினர்**

01 48 21 89 57 – 01 41 71 41 25

www.padippakam.com

## நாடு போற்ற வாழ்க

இந்த புறா ஆட வேண்டுமானால்!
இளவரசர் பாட வேண்டுமா?

எங்கள் கனகர் பாடுவதற்கு
இனிய இதயங்கள் பேர்தும்.

நளினமாக பாடுவார்!
நகைச்சுவையாக பாடுவார்!
நல்ல கருத்தோடு பாடுவார்- அந்த
நல்ல உள்ளம் வாழ்க
நாடு போற்ற வாழ்க
நூறாண்டு வாழ்க

*இரா. குணபாலன்*
ஆர். ரி. எம். பிரதேஸ்

## வணங்கி நிற்கின்றேன்
## வியந்து நிற்கின்றேன்

வெண்கலக் குரலினிலே
வெள்ளி மணி ஓசைபோல்
நெஞ்சுருக் இசைபாடி
கொஞ்சி வரும் இனிய குரல்
கனரையா தொண்டையிலே
சலங்கை கட்டி சரசமாடும்
பவளவிழா காணும் உம்மை
வாழ்த்த வயதில்லை
வணங்கி நிற்கின்றேன்.-உமது
சாதனைகளை பார்த்து
வியந்து நிற்கின்றேன்!

பிரியாலயம் துரைஸ்

## பொன் விழாவும் காணவேண்டும்

பாடுவோர் பாடினால்
பாட்டிலே தேன் மணக்கும்
ஆடுவோர் ஆடினால்
அமிர்தமும் தோற்றுப் போகும்
வாடுவோர் வாட்டம் நீங்கும்
கனகரின் பாட்டுக் கேட்டால்

ஐயா... பவளவிழாவோடு
நின்றுவிடாதீர்கள்
உங்கள் பொன் விழாவிற்கும்
நாங்கள் வரவேண்டும்

சின்னக்குட்டி. ரி. தயாநிதி

## நாடு போற்ற வாழ்க

பாவலர் அறிவில் தோன்றும்
பைந்தமிழ் கவிதைகளை
கோவலர் குலமாம் கண்ணன்
குழலிசை இனிமை போன்று
பாவிளை பாடும் எங்கள்
கனகரின் பாடல் கேட்க
ஆவல் தூண்டும் ஆசை பிறக்கும்
அவர் குரல் இனிமைக்கினி
எவர் வருவார் இப்புவியில்

*எம். குருநாதன்*
*இளையநிலா*

படிப்பகம்

www.padippakam.com

நல் இதயங்களே வாருங்கள் வாழ்த்துவோம்!
எங்கள் கனகர் நூறாண்டு வாழ்கவென
வாருங்கள் வாழ்த்துவோம்.

---


**பாரீஸ் லா, சப்பலில்**

மருந்தோடு விருந்துண்டு மகிழ

*சுத்தம் சுவை தரம்*

*அதன் இருப்பிடம்*

# ROYAL SNACK BAR

**58, rue Louis Blanc**
**75010 Paris**
**Tel;-0140364121**




படிப்பகம்

www.padippakam.com

## வாழ்த்துவோம் வாருங்கள்

நிலமது விளை வேண்டின்
நித்தமும் உழைக்கவேண்டுப்
பலமது குன்றிப் போனால்
எவருமே மதிக்க மாட்டார்
பலருமே போற்ற பாடுப்
கனகரை வாழ்த்த வந்தேன்
வயதினை பார்க்க வேண்டாப்
திறமையை வாழ்த்த இங்கு
வயதொன்றும் தடையில்லை
வாழ்த்தினேன் கனகரை
நூறாண்டு காலம் வாழ்க

அ. இராகுலன்
றோயல் உணவகப்

## கலையுலகம் மறக்காது

பாலோடு தேன்கலந்து பருகதல்
போன்று
பாட்டுக் கனகரின் குரலிலே
மென்மை
மேலான சினிமா பாட்டு
மட்டுமன்றி
விடுதலைக் கீதமும் இனிதாய்
இசைப்பார்
நாளையும் உம் பெயர் நாடு
சொல்லும்
கரையுலகம் மறக்காது கனகர்
தன்னை


கலைமாமணி
பெஞ்சமின் இமானுவேல்

கனகர் ஐயா அவர்களின் பவளவிழா சிறப்புற எங்கள் வாழ்த்துக்கள்

# நியூ லேற்றஸ் மொட் ரெயிலறிங் சொட்

பழைய-புதிய படங்கள்
வாடகைக்கும் விற்பனைக்கும்,
தரமான ஐங்கரன், பிரமிட்
பிரதிகள் விற்பனைக்கு,
மற்றும் பழைய புதிய பாடல்கள்
அடங்கிய ஓடியோ சீடிக்கள்





உங்கள் பயண தேவைகட்கு வாகன சேவையும்
எம்மிடம் உண்டு
15 rue Perdonnet.
75010 Paris. Métro: La Chapelle
Tel.: 01 46 07 77 75

படிப்பகம்

www.padippakam.com


எங்கள் கனகர் ஐயாவிற்கு நடைபெறும் பாராட்டுவிழா
நாங்கள் பிறந்த புங்குடுதீவு மண்ணிற்கு நடைபெறும் விழா
எங்கள் கனகர் ஐயா இனனும் பல்லாண்டு வரி வாழ்த்துவோம்

**HARAIHARAN**

தாயகத்து மண் வாசனை கமழுப்
உணவு வகைகளை உண்டு மகிழ

**கரிகரன் உணவகம்**

***தினமும் ஐந்து விதமான கறி வகைகளுடன்***
வெள்ளிக் கிழமைகளில் வடை பாயாசப்
*இப்படி சுவை மிகு உணவு வகைகளை உண்டு சுவைக்க*
**வாசப்பலில்**

**கரிகரன் உணவகம்**

**20, rue Perdonnot**
**Paris10**
**Métro: La Chapelle**
**Tel.: 0688408460 - 0140371985**


படிப்பகம்

www.padippakam.com

பவளவிழா காணும் பாட்டுக் கலைஞருக்குப்
ராகரசம் பாடிவரும் சத்தியாவிற்குப்
எங்கள் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்.

ஆண்கள் பெண்கள் சிறுவர் சிறுமிகள்
அனைத்து தரப்பினர்க்கும் ஏற்ற வகையில்
நவீன ஆடை வகைகளுக்கு

# திருப்பதி பெஷன் கவுஷ்

இது ஒரு ஆடைச் சுரங்கப்
உங்கள் ஆடைத் தெரிவுகளுக்கு இன்றே நாடுங்கள்

# THRUPPATHY FASHION HOUSE

203, Fg.St. Denis
75010 Paris
Tel.: 01 40 37 56 44

படிப்பகம்

www.padippakam.com


புங்கை மண்ணின் புகழ் பாட
சங்கத் தமிழில் பாடல்கள் பாடி
எங்களை பெருமை பெற வைக்கும்
பாட்டுக் கலைகருக்கு எங்கள் வாழ்த்துக்கள்

# கோபால் அன் கோ

லா, சப்பலில் மிகப் பெரிய மளிகை ஸ்தாபனம்

பசுமை மிகு மரக்கறி வகைகள்
மாத, வார, சஞ்சிகைகள். பத்திரிகைகள்
கடலுணவு வகைகள்
தொலைபேசி அட்டைகள்
இன்னும் இன்னும் என்னவேண்டும் உங்களுக்கு
எல்லாமே இருக்கின்றது எங்களிடம்

இல்லை என்ற வார்த்தை எம்மிடம் இல்லை
எல்லாமே மிக மிக மலிவு

**இல்லத்தரசிகளின் மனப்**

**நிறைந்த மளிகை ஸதாபனம்**

GOPAL &. COMPANY SUPER MARCHE

**72, rue Louis Blanc**
**Métro: La Chapelle**
**Tel.: 01 53 26 09 25**

www.padippakam.com


# அம்பாள் வீடியோ,

## நகைமாளிகை, ரெக்ரைஸ்ஸ்

VIDEO பிரதிகள் வாடகைக்கும்,

சிறுவர், சிறுமிகள், ஆடவர்க்கு ஏற்ற ரெடிமேட் உடுப்புக்கள்

குறித்த நேரத்தில் நகைகள் செய்து கொள்வதற்கும்

ஐரோப்பா எங்கும் செல்வதற்கும்,

பொருட்கள் இடமாற்றம் செய்ய வாகன தெவைகட்கும்

*லாசப்பலில் அம்பாள்.*

*தொ840229ா லைபேசி:-0610384492-0603*



*பாதுகாப்பான போக்கு வரத்து சேவைக்கு*

# பேபி, வாகன சேவை




ஐரோப்பா எங்கும் நீங்கள் சொகுசாக பாதுகாப்பாக பயணம் செய்ய

பேபி வாகன சேவை

*தொடர்புகட்கு*-0148358693-0617128516-0140364121

www.padippakam.com


வாழும் விழாபோதே நமது கலைஞர்களை
வாழ்த்திவைப்போம்.

பவளவிழா காணும் பாட்டுக் கனகருக்கும்
தனி மனிதனாக நின்று தனது4வது இசைத்தட்டை
வெளியடும் சத்தியாவிற்கும்

தர்ஷனாவின்

உளம் நிறைந்த நல் வாழ்த்துக்கள்

இனிமையான வரவேற்பு சுவை மிகுந்த ருசி
நாணயமான விலை

அத்துடன் தமிழ் தொலைக்காட்சியை
பார்த்தபடியே உணவருந்தி மகிழலாம்

நாடுங்கள்

★ தர்ஷனா உணவகம் ★

மிக விரைவில் 100ஆசனங்களுடன் கூடிய
தர்ஷனாவின்

மற்றுமோர் புதிய உணவகம்

லாசர்லில் இதுவே மிகப் பெரிய உணவகம்

22 , rue Perdonnet - 75010 Paris
Tel.: 0140050836 / 0680029341


படிப்பகம்

www.padippakam.com/assprorro/870.htm




படிப்பகம்